

பொது மக்களின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் திராவிட மாடல் நல்லாட்சியில், கள்ளக்குறிச்சி நகராட்சி, ஏமப்பேர் புறவழிச்சாலை ரவுண்டானா அருகில் ரூ.16.21 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள புதிய புறநகர் பேருந்து நிலையத்தினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று முன்தினம் (03.02.2026) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் உள்ளிட்டப் பலர் உடனிருந்தனர்.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 57ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணா துரை, கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மற்றும் எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ் உட்பட பலர் உள்ளனர்.

இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு வருகை தரும்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### செயற்குழு கூட்டத்தில் முடிவு – அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரை!

இராணிப்பேட்டை, பிப்,5–

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் – மாவட்ட செயலாளர் ஆர்.காந்தி சிறப்புரை ஆற்றினார். உடன் மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர். விநோத்காந்தி,மாவட்ட இளைஞர் அணி அமைப் பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட நிர்வாகிகள் மு.சிவானந்தம், துரைமஸ்தான், குமுதா குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி வழியில் கழக ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்னும் முழக்கத்தை ஓங்கி ஒலித்து மத்திய ஒன்றி யத்தில் முதன்மை மாநிலமாக முன்னெடுத்து சிறந்த முதலமைச்சராக திகழும் நமது கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு வருகிற9–ந்தேதிகாலை10மணிக்கு வருகைதருகிறார்.

தமிழகத்தில் வரலாற்று சிறப்புமிக்க ‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் டாடா கார் உற்பத்தி தொழிற்சாலை 470 ஏக்கர் பரப்பளவில் இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டை யில் 35 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முன்னணி கார் உற்பத்தி நிறுவனம் டாடா மோட்டாரின் ஜெ.எல்.ஆர். உலக முன்னணி கார் உற்பத்தியை துவக்கி வைக்க நமது மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் _கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டை நுழைவு வாயிலில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

வரலாற்று தலைவர் தளபதி அவர்கள் கோபால புரம் இளைஞர் திமுக ஆரம்பித்து மாநில இளைஞ ரணி குழுவில் இடம் பெற்று மாநில இளைஞரணி செயலாளராக , கழக துணை பொது செயலாளராக , கழக பொருளாளராக, சென்னை மாநகர மேயராக –தமிழ்நாடு உள்ளாட்சித் துறை அமைச்சராக , தமிழ்நாடுதுணை முதலமைச்சராக ,கழக தலைவராக தமிழ்நாடுபொது மக்கள் ஆதரவோடு தமிழ்நாடு முதல்வராக பொறுப்பு வகித்து ,பொறுப்புகளுக்கு பெருமையை தேடி தந்தவர் தலைவர் தளபதி ஆவார்.

தமிழகத்தில் பொற்கால ஆட்சியை நடத்தி மகளிர்க்கு கட்டணம் இல்லா பேருந்து, மகளிர் உரிமைத்தொகை,பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டம், இல்லம் தேடி கல்வி, புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம் ,தமிழ் புதல்வன் திட்டம் தாயுமானவர் திட்டம் மக்களுடன் முதல்வர் ஆகிய வரலாற்றுத் திட்டங்களை செயல்படுத்தும் திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாய் மாநில முதல்வர்களின் முதல் முதல்வராய் சிறந்து விளங்கும் தலைவர் தளபதி அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது என தீர்மானிக்கப்படுகிறது.

தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் 234 சட்டமன்ற தொகுதியிலும் தலைமை கழகம் பரப்புரை அறிவித்துள்ளது. நமது மாவட்டத்தில் 11.2.2026 புதன்கிழமை அன்று இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி வாலாஜாபேட்டையில் நடைபெறும்.

19–2–2026 வியாழக்கிழமை அரக்கோணம் சட்டமன்றத் தொகுதியில் அரக்கோணம் பேருந்து நிலையம் அருகிலும் இருபத்தி நாலு ரெண்டு 2026 செவ்வாய்க்கிழமை சோளிங்கர் சட்டமன்ற தொகுதி சோளிங்கர் மற்றும் 25 26 புதன்கிழமை ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் ஆற்காடு பேருந்து நிலையத்திலும் மேற்கண்ட கூட்டங்களை சிறப்பாக நடத்தி முடிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்க ப்படுகிறது .

திருப்பத்தூர் மாவட்டத்தில் வருகிற 14 –2 –2026 சனிக்கிழமை அன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் வழக்கு மண்டல மாநாட்டில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள பி.எல்.ஏ 2 ,பிஎல்சி, பிடிஎ நிர்வாகிகள் மற்றும் அழைப்பிதழில் உள்ள கழக தோழர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் கலந்துகொண்டு மாநாட்டினை வெற்றி பெற செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், சங்கராபுரம் வடக்கு ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட லக்கி நாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஷீலா ராஜேந்திரன் ஏற்பாட்டில்,ரிஷிவந்தியம் தொகுதி, லக்கி நாயக்கன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த நாம் தமிழர் கட்சியின் தொகுதி இளைஞர் பாசறை நிர்வாகி மா.புருஷோத்தமன் மற்றும் அ.தி.மு.க. கிளை இளைஞர் பாசறை நிர்வாகி ரா.செந்தூரப்பாண்டி ஆகியோர் தங்களது ஆதரவாளர்கள் 50க்கும் மேற்பட்டோருடன் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். புதிதாக கழகத்தில் இணைந்த அனைவருக்கும் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கழக இரு வண்ண வேஷ்டிகளை அணிவித்து,தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்

### பிப்ரவரி 5 (2021)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரிடம் அணுக்கமாக இருந்து அரிய முறையில் தமிழ் எழுத்துப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாளில், அதன் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற 150 பேரில் ஒருவரும் – தன் இறுதி மூச்சு வரை கழகத்தின் உறுதியான உடன்பிறப்புகளில் ஒருவராக விளங்கியவர்.

71 ஆண்டுகளுக்கும் மேலாக முழுநேரமும் பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு, நல்ல தமிழ்ச் சொற்களை நடைமுறைக்கு கொண்டு வந்த தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளராக விளங்கியதுடன், கழக ஏடுகளான ‘மாலைமணி’, ‘நம்நாடு’, ‘கழகக்குரல்’ உள்ளிட்ட பல்வேறு ஏடுகளில் பணியாற்றியதுடன், முதலில் ‘கவிக்கொண்டல்’ என்றும் பின்னர், ‘மீண்டும் கவிக்கொண்டல்’ என்றும் தொடர்ந்து 32 ஆண்டுகள் அவ்விதழை நடத்தியவர். 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

மவுண்ட்ரோடு போஸ்ட் ஆபீஸ் என்ற பெயரை ‘அண்ணாசாலை அஞ்சல் அலுவலகம்’ என்று பெயர் மாற்றிட காரணமாக இருந்தவர்.

2018ஆம் ஆண்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தலைமைக் கழகத்தின் சார்பில் “பேராசிரியர் விருது” வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

உள்ளூர் பொருளாதாரம் – கிராமப்புறங்களுக்குப் பயனளிக்கும் வகையில்

## பாரத்மாலா பரியோஜனாவின் விரிவாக்கம் - எதிர்காலத் திட்டங்கள் என்ன?

### மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.5–

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:–

பாரத்மாலா பரியோஜனாவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் குறித்த விவரங்கள், முடிக்கப்பட்ட மற்றும் நடந்து கொண்டிருக்கும் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

குறிப்பாக தமிழ்நாடு மற்றும் பிற தென் மாநிலங்களில் பிராந்திய இணைப்பில் திட்டத்தின் தாக்கம் என்ன?

பாரத்மாலா பரியோஜனாவின் தளவாட செயல்திறன், போக்குவரத்து செலவுகளைக் குறைத்தல் மற்றும் சரக்கு போக்கு வரத்திற்கான நேரத்தை மிச்சப்படுத்துதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுத்ததா? அப்படியானால், தரவு மதிப்பீட்டின் விவரங்கள் என்ன?



உள்ளூர் பொருளாதாரம் மற்றும் கிராமப்புறங்களுக்கு மேலும் பயனளிக்கும் வகையில் பாரத்மாலா பரியோஜனாவின் விரிவாக்கம் மற்றும் விரைவுபடுத்துவதற்கான எதிர்காலத் திட்டங்கள் என்ன?

பாரத்மாலா பரியோஜனாவின் ஒட்டுமொத்த வெற்றி மற்றும் சமூகபொருளாதார தாக்கத்தை ஒன்றிய அரசு இதுவரை மதிப்பிடும் விதம் என்ன?

இவ்வாறு தே.மலை யரசன் கேள்வி எழுப்பினார்.

## குத்தாலம் பி.கல்யாணம் சகோதரர் பி.சந்திரசேகரன் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

மயிலாடுதுறை பிப். 5–

மயிலாடுதுறை மாவட்டம் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் சகோதரரும் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் க. அன்பழகன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.அறிவுச் செல்வன் ஆகியோரின் சிறிய தந்தையுமான சின்னபிள்ளை [எ] பி.சந்திரசேகரன் நேற்று முன்தினம் (03.02.2026) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருத்துகிறோம்.

மறைந்த பி.சந்திர சேகரனுக்கு மனைவி சி.உமா மகன்கள் சி.வினோத், சி அஸ்வின் ஆகியோர் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (04.02.2026) மாலை 03.00 மணிக்கு நடை பெற்றது.

குத்தாலம் திருவேள்விக்குடியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்ட பி.சந்திர சேகரன் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 57– வது நினைவு நாளில், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணியாக சென்று கலைஞர் அறிவாலயத்தில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு, விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர், டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் செ.புஷ்பராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், A.மாரிமுத்து, பிரேமா குப்புசாமி, இரா.சக்கரை, எஸ்.வெற்றிவேல், எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் ரூ.2.33 கோடியில், சாலைப் பணிகள்!

### சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கடலூர் பிப்,5–

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியத்தில் மாநில சேமிப்பு நிதியிலிருந்து மொத்தம் ரூ.2.33 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

வடக்குத்து முதல் ஆயிப்பேட்டை வரையிலான இணைப்புச் சாலை ரூ.1.50 கோடி, வெங்கடாம்பேட்டை ஆதிதிராவிடர் பகுதி சாலை ரூ.33.51 லட்சம், மதனகோபாலபுரம் முதல் பெலாந்தோப்பு வரையிலான கிராம சாலை ரூ.49.77 லட்சம் ஆகிய சாலைப் பணிகளை நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் அ. குணசேகரன், பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.சந்தோஷ்குமார், அவைத்தலைவர் வீரராமச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி இராம.வெங்கடேசன், பிச்சையா, ஜே.சடையப்பன், இளைஞர் அணி பாக்கியராஜ் அந்தோணிதாஸ் ,கோவிந்தராசு, காசிலிங்கம், முத்துகிருஷ்ணன், மணிகண்டன், அன்பழகன், சதானந்தம், ராமர் வெள்ளக்கண்ணு,பாண்டியன் தனபால், ராமலிங்கம், வெற்றிவேல், கோபாலகிருஷ்ணன், தனசேகரன், வேல்முருகன், வேணுகோபால், தனசேகரன் ,செல்வராசு, குமார், பாலகிருஷ்ணன், செல்வம், சின்ன சாமி, சிங்காரவேலன், மணிகண்டன், பிரபு ,சிவசங்கரன், விஜயலட்சுமி ,பசுபதி , சாம்பசிவம், சௌந்தர்ராஜன், முத்துசாமி, கனகசபை, இராமலிங்கம்,முருகன்,ஊராட்சி செயலர் சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


13–ம் ஆண்டு

நினைவு அஞ்சலி

“ கலைஞர் விருது பெற்ற ”

மத்திய, மாநில அரசு நல்ஆசிரியர் விருது பெற்ற



தோற்றம் : 08.04.1920

மறைவு : 05.02.2013

திருமதி

பொற்செல்விஇளமுருகு

...என்றும் நினைவில் வாழும்...

பெ.ஆனந்த்குமார் B.Com., Ex.M.C.,

கரூர் மாவட்ட துணை அமைப்பாளர், தி.மு.கழக விளையாட்டு மேம்பாட்டு அணி